1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, கரும்பு விலையில் உற்பத்தியாளருக்கு அதிகமாகக் கிடைக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரால் யோசனை சொல்லப்படுகிறது. பல முறை ஒரு உத்தரவு வழங்குங்கள் என்று நாங்கள் எழுதியும் இது வரை பதில் இல்லை. ஆனால், 80 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது இந்த ஆண்டு 85 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 85 மாத்திரம் அல்லாது அவர்களுக்கு எந்த அளவுக்கு அந்த உற்பத்தித் திறன் இருக்கிறதோ அந்தத் திறன் அடிப்படையிலும் அதற்கு 1 சத விகிதம் கூட்டி அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பல இடங்களில் திறன் அதிகமாகி, இப்பொழுது 85 க்குப் பதிலாக 90, 96, 100 என்று கூட திறன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு தகுதி அளவில் திறன் இருந்தாலும் நாம் நிர்ணயித்த விலை 85 ரூபாய்க்குக் குறையக் கூடாது என்று வலியுறுத்திப் பேசப்பட்டு இன்று நடைமுறையில் வருகிறது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரெகவரி திறன் என்று கூறுவதுபோல, 9 லிருந்து 10 அளவு என்று வருவதை நாம் இப்பொழுது 80 லிருந்து 100 க்கு உயர்த்தியிருக்கிறோம். அந்தத் திறனுக்கு என்ன விலை என்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறதா? அல்லது மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 9.4-க்கு மேல் இருந்தால் தான் அதற்கு மேல் திறன் அடிப்படையில் கொடுக்கப்படும்.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, திறனுக்கு ஏற்ப என்னென்ன அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது என்ற விளக்கம் வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தனியாகக் கேள்வி போட்டால், பட்டியல் தெரிவிக்கிறேன்.

Sri Dharmaraja Koil at Saidapet, Madras.

*132 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government are aware that Sri Dharmaraja Koil at Saidapet, Madras, is in a dilapidated condition; and

(*b*) if so, the action taken thereon?

சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஸ்ரீ தர்மராஜா கோயில்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ள பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஸ்ரீ தர்மராஜா கோயில் இடிந்த நிலையிலுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) : தர்ம ராஜா கோவில், கருவறையும், முன் மண்டபமும் நல்ல நிலையில் உள்ளன. விமானத்தில் சுதை வேலைப்பாடுகளும், தெற்கு, வடக்கு, மேற்குப் பக்கங்களிலுள்ள மதிர் சுவர்களும் பழுது பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. தகுந்த சீரமைப்புகள் மேற்கொள்ள இக்கோயிலுக்கு திருப் பணிக்குழு ஒன்று இந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் அமைக்கப்பெற்றுள்ளது.

Deposits of the Retired Executive Officers of Temples.

*133 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the deposits of a number of retired Executive Officers of Temples have not been refunded ; and

(*b*) if so, the steps taken to refund these deposits ?

கோவில் நிர்வாக அதிகாரிகள் பிணைய வைப்புத் தொகை.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெற்ற கோயில் நிர்வாக அதிகாரிகள் பலரின் பிணைய வைப்புத் தொகை திருப்பித் தரப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதைத் திருப்பித் தருவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : **(அ) ஆம்.**